**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 23-05-2023**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-05-23 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-05-24 | 2023-05-25 | 2023-05-26 | 2023-05-27 | 2023-05-28 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 2.0 | 0.0 | 3.0 | 8.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 39.0 | 40.0 | 40.0 | 39.0 | 39.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 28.0 | 29.0 | 28.0 | 28.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 60 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6 | 8 | 8 | 10 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 230 | 250 | 270 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 6 | 7 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

மே 24,26,27,28 தேதிகளில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 39-40 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸ் ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 60 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 6-8 கி.மீ வரை தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் மே 28 முதல் 03, 2023 வரை இயல்பான மழை மற்றும் வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. புன்செய் சாகுபடி செய்யும் விவசாயிகள், கோடை உழவு செய்து வேர் மூலம் பரவும் நோய்கள் , வேரை தாக்கும் புழுக்கள், பூச்சிகள் மற்றும் களைகளை கட்டுப்படுத்தவும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பூச்சி மற்றும் பூஞ்சாணகொல்லியுடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவில் கார்பன்டாசிம் அல்லது பைரோகுயிலான் அல்லது ட்ரைசைக்ளசோல் -ஐ ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். விதைகளை கரைசலில் 8-10 மணி நேரம் ஊற வைத்து, கரைசலை வடிகட்டி, விதை நேர்த்தி செய்ய வேண்டும். இந்த ஈர விதை நேர்த்தியானது நாற்றுகளுக்கு 40 நாட்கள் வரை விதை மூலம் பரவும் நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. விதைப்பதற்கு உடனடியாக விதைகள் தேவைப்பட்டால், ஊறவைத்த விதைகளை கோணி பையில் கட்டி இருட்டில் வைத்து கூடுதல் கோணி பைகளை கொண்டு மூட வேண்டும். முளைப்பதற்கு 24 மணிநேரம் விட்டு பின்பு விதைக்க வேண்டும். சொர்ணவாரி பட்டத்திற்கு(ஏப்ரல்-மே) ஏற்ற நெல் இரகங்கள்: குறுகிய கால வயது <120 நாட்கள். ஆடுதுறை - 36,37,43,45,56, கோ -51, கோ -57, டிபிஎஸ்-5, டிஆர்ஓய்-5 மற்றும் ஏஎஸ்டி-21. |
| நிலக்கடலை | நிலக்கடலை விதைகளை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா என்ற அளவில் விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். வைகாசி பட்டத்திற்கு(மே- ஜூன்) ஏற்ற நிலக்கடலை இரகங்கள்:விஆர்ஐ-10, டிஎம்வி-10,14 மற்றும் டிஎம்விஜி -13. |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | புதியதாக தென்னை நடவு செய்யும் விவசாயிகள் குட்டை×நெட்டை அல்லது நெட்டை× குட்டை என்ற வீரிய ஒட்டு இரக தென்னங்கன்றுகளை பயன்படுத்தலாம். |
| மாம்பழம் | மாம்பழங்களை அறுவடை செய்யும்போது பழத்தின் மேற்பரப்பில் பால் படிவதை தவிர்க்க பழத்துடன் காம்பை 1 செ .மீ விட்டு அறுவடை செய்ய வேண்டும். மேலும் மாம்பழங்கள் சீராக பழுக்கவும் மற்றும் நல்ல நிறத்துடன் காணப்படவும் சில சோடியம் ஹைட்ராக்சைடு துகள்களுடன் பரிந்துரைக்கப்பட்ட எத்தரல் 2 மிலி / லிட்டர் உடன் சில சோடியம் ஹைட்ராக்சைடு துகள்கள் சேர்த்து பயன்படுத்தலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பசு மாடுகளுக்கு ஒவ்வொரு 2.5 லிட்டர் பால் உற்பத்திக்கும் ஒரு கிலோ அடர்தீவனம் தரவேண்டும். மேலும் நாள் ஒன்றுக்கு 3.0 |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | கிலோ மரவகை தீவனம் ( அகத்தி, சீமை அகத்தி ,சுபா புல், மல்பெரி), ஒரு கிலோ அசோலா மற்றும் 30 கிலோ பசுந்தீவனம் கொடுத்தால் பால் உற்பத்தியும், பாலில் கொழுப்பு சத்தும் அதிகரிக்கும். |
| வெள்ளாடு | ஆடுகளுக்கு தினசரி 200 கிராம் தானியன்கள் மற்றும் புண்ணாக்கு சேர்ந்த அடர் தீவனம் தரவேண்டும். இவ்வாறு 20 நாட்களுக்கு கொடுத்த பின்பு மழைக்காலங்களில் இன விருத்தி செய்யும் பெட்டை ஆடுகளில் இரட்டை குட்டிகள் உருவாக வாய்ப்புள்ளது. |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | 21 நாட்களுக்கு மேற்ப்பட்ட கோழிக்குஞ்சுகள் மற்றும் கோழிகளுக்கு RDVK என்ற ராணிக்கெட் நோய் தடுப்பூசியை கழுத்து தோலுக்கு அடியில் 0.5 மி .லி வீதம் ஊசியாக போடவேண்டும். இதனால் இராணி கெட் என்ற பச்சை / வெள்ளை கழிச்சல் நோயால் ஏற்படும் இறப்பு தடுக்கப்படும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நில தயாரிப்பு | குறைந்த ஆழத்தில் மண் கடின அடுக்கு உடைய நிலத்தை உளிக்கலப்பையைக் கொண்டு 0.5 மீ இடைவெளியில் ஒரு திசையில் உழவேண்டும். பின்னர் அதற்கு நேர் எதிர் திசையில் உழவேண்டும். இவ்வாறு 3 வருடத்திற்கு ஒரு முறை செய்யவேண்டும். பின்னர் 12.5 டன் தொழு உரம் அல்லது நன்கு மக்கிய தென்னை நார்க்கழிவு இடவேண்டும். |